IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.44/2025

Deposition of Witness for P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | திருமதி.பரமேஸ்வரி |
| HUSBAND NAME | - | மகாலிங்கம் |
| VILLAGE | - | கீழ்கொத்தூர் |
| TALUK | - | அணைக்கட்டு |
| OCCUPATION | - | இல்லத்தரசி |
| AGE | - | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.01.2026.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 ஆம் எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார் அவரது வழக்கறிஞர் ஆஜர். 5 முதல் 9 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் கீழ்கொத்தூர் கிராமத்தில் குடியிருக்கிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எனது கணவர் மகாலிங்கம் சுமார் 5 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். எனது மைத்துனர் சுந்தரேசன் 1 மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார். 10 வருடத்திற்கு முன்பு 8ம் மாதம் 10 ம் தேதி எனது கணவர் மகாலிங்கம் காது வலிக்காக சிகிச்சைக்காக cmc மருத்துவமனை எதிரிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்றார். எனது கணவர் வீட்டிலிருந்து காலை 08.00 மணிக்கு கிளம்பினார். எனது கணவர் திரும்பி வராததால் காலை 11.00 மணிக்கு எனது கணவருக்கு போன் செய்தேன். அவர் போனை எடுக்கவில்லை. மதியம் 01.00 மணிக்கு மேல் எனது கணவர் போனிலிருந்து எனக்கு போன் வந்தது. எனது கணவரை கடத்தி

வைத்துள்ளோம் ரூ.20,00,000/- லட்சம் கொடுத்தால் விடுவோம் இல்லையென்றால் கொலை செய்து விடுவோம் என மிரட்டினார்கள். அன்று மாலை எனது கணவர் அவருடைய போனிலிருந்து எனக்கு போன் செய்தார். அவரை காப்பாற்ற வேண்டும் என்றும் கடத்தியவர்கள் அவரை கஷ்டப்படுத்துகிறார்கள் என்றும், எப்படியாவது என்னை காப்பாற்றிவிடு என்று சொன்னார். என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது என்று சொன்னவுடன் ரூ.10,00,000/- கொடு என்று சொன்னார்கள். கடைசியாக ரூ.4,00,000/- கொடுத்தால் எனது கணவரை விட்டுவிடுவதாக சொன்னார்க்ள. மறுநாள் எனது கணவர் போனிலிருந்து எனக்கு மதியம் பேசி ரூ.4,00,000/- எடுத்துக் கொண்டு வேலூர் புது பஸ் ஸ்டாண்டிற்கு மாலை 04.00 லிருந்து 05.00 மணிக்கு வரச்சொன்னார்கள். நானும் எனது மைத்துனரும் ரூ.4,00,000/- ஐ எடுத்துக் கொண்டு வேலூர் புது பஸ் ஸ்டாண்டிற்கு மாலை 04.00 மணிக்கு போனோம். வேலூர் புது பஸ் ஸ்டாண்டில் நானும் எனது மைத்துனரும் இருந்தபோது மறுபடியும் எனது கணவர் போனிலிருந்து எனக்கு போன் வந்தது அதில் எங்களை காட்பாடி கிருஷ்ணா தியேட்டருக்கு வருமாறு சொன்னார்கள். (சாட்சி தற்போது தியேட்டரின் பெயர் சரியாக நினைவில்லை என்று கூறுகிறார்). நாங்கள் உடனே காட்பாடி தியேட்டருக்கு போனோம். அங்கு காத்திருக்கும்போது போனில் காட்பாடி ஆட்டோ ஸ்டாண்டிற்கு வருமாறு சொன்னார்கள். காட்பாடி தியேட்டரிலிருந்து நாங்கள் காட்பாடி ஆட்டோ ஸ்டாண்டிற்கு போகும்போது மாலை 07.30 மணி இருக்கும். காட்பாடி ஆட்டோ ஸ்டாண்டிலிருந்தபோது போன் மூலம் மீண்டும் எங்களை காட்பாடி கோழி பண்ணை வரை வரச்சொன்னார்கள். காட்பாடி கோழி பண்ணையில் ஆட்டோவிலிருந்து இறங்கி கொஞ்ச தூரம் நடந்து வரச் சொன்னார்கள். நாங்கள் இருவரும் ஆட்டோவிலிருந்து இறங்கி நடந்துச் சென்றபோது,

இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் தனித்தனியாக வந்து நான் ஒரு பைக்கிலும் எனது மைத்துனர் சுந்தரேசன் ஒர பைக்கிலும் உட்கார்ந்துக்கொண்டோம். இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் முகத்தில் முகமூடி மாதிரி துணியை கட்டிக்கொண்டு முகத்தை மறைத்தபடி வந்தார்கள். தற்போது எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியவில்லை. இரவு நேரம் என்பதாலும் இருசக்கர வானத்தில் வந்தவர்கள் துணியால் முகத்தை மறைத்து கட்டிக் கொண்டு வந்ததால் அடையாளம் காட்ட இயலவில்லை. இருசக்கர வாகனத்தில் சுமார் அரை கிலோமீட்டர் போனோம். பின்னர், இரயில்வே டிராக் அருகே வண்டியை நிறுத்தி பணம் கேட்டார்கள். நான் என்னுடைய கணவரை காண்பித்தால் தான் பணம் கொடுப்பேன் என்று சொன்னேன். உடனே அந்த இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் முதலாளியை கேட்டு வருகிறோம் என்று சொல்லி சென்றுவிட்டார்கள். அதன் பிறகு யாரும் அங்கு வரவில்லை. சுமார் அரை மணி நேரம் நாங்கள் அங்கு இருந்தோம். யாரும் வரவில்லை என்பதால் எனது கணவரும் வரவில்லை என்பதால் உடனே திருவலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது, அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். என்னுடைய மைத்துனர் சுந்தரேசன் புகாரை நான் சொல்லச் சொல்ல எழுதினார். எனது கணவர் இரண்டு நாள் கழித்து வீட்டிற்கு வந்தார். எனது கணவரிடம் கேட்டபோது அவர் ஆள் மாற்றி அவரை கடத்திபோய்விட்டதாக சொன்னார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை-</u>

எனது கணவர் விவசாயம் தான் செய்து வந்தார். எனது கணவருக்கு விவசாய தொழில் மூலம் தான் வருமானம் வந்தது. எனது கணவர் காது சிகிச்சைக்காக தான் நாங்கள் வந்தோம். எனது கணவர் எந்த டாக்டரிடம் சிகிச்சை பெற்றார் என்று தெரியவில்லை. எனது கணவர் மீது எந்த குற்ற வழக்கும் கிடையாது. எனது கணவருடைய போன் நம்பர் முழுவதுமாக தெரியாது. கடைசி இரண்டு எண்கள் 77 என்று வரும். எனது கணவர் அந்த போனை 15 வருடமாக உபயோகப்படுத்தி வந்தார். என்னுடைய போன் நம்பர் எனக்கு சொல்ல தெரியாது. எனக்கு என்னுடைய போனிற்கு எனது கணவருடைய போனிலிருந்து தான் கடத்தியவர்கள் பேசினார்கள். போன் செய்தவற்களிடம் யார் என கேட்டதற்கு அவர்கள் உங்களுக்கு அது தேவையில்லை என சொல்லிவிட்டார்கள். மதியம் 01.00 மணிக்கு எனது கணவர் ஒரே ஒரு முறை அவரை கடத்திவிட்டதாக சொன்னார். எனது கணவர் கடத்தப்பட்டவுடன் அவருடைய போனிலிருந்து எத்தனை முறை பேசினார்கள் என்று எனக்கு குறிப்பாக தெரியாது. புகாரை எனது மைத்துனர் தான் எழுதினார். நான் சொல்லச்சொல்ல புகாரை எனது மைத்துனர் எழுதினார். நான் சொல்லச்சொல்ல புகாரை எனது மைத்துனர் எழுதினார். எனது புகார் அ.த.சா.ஆ. 1 ல் எழுதப்பட்டுள்ள விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது நான் படிக்கவில்லை. புகாரில் கையெழுத்து மட்டும் காவல் நிலையத்தில் நான் செய்து கொடுத்தேன். இந்த வழக்கு பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

**<u>மறு விசாரணை- அரசு தரப்பில்</u>**

புகாரை நான் எனது மைத்துனர் சுந்தரேசனிடம் சொல்லச்சொல்ல அவர் எழுதினார். எனக்கு படிக்க தெரியாததால் தற்போது புகாரில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. எனது கணவரை கடத்தி பணம் கேட்டு அது சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 19.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.19 19:26:45 +0600

Additional District Judge(FTC),
Vellore